[7th November 1966

லிருந்து வரக்கூடியதை மாநில சர்க்கார் தங்கள் நிதியுடன் பட்டுவாடா செய்யப்படுகிறது ; பழக்கப்படி நகர மன்றங்களும் அதே கால அளவை அனுசரிப்பார்கள். மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—REQUEST FOR HALF-HOUR DEBATE.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, நெய்வேலியிலே . . .

கனம் சபாநாயகர் : இப்போது எதைப் பற்றிப் பேசுகிறீர்கள் ? ஏதாவது பாயின்ட் ஆஃப் ஆர்டரா அல்லது பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷனா . . .

திரு. ப. உ. சண்முகம் : அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கேட்பதற்காகப் பேசுகிறார்.

கனம் சபாநாயகர் : நான் தான் கன்ஸிடர் பண்ணுகிறேன் என்று சொல்லியிருக்கிறேனே.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. கனம் சபாநாயகர் அவர்கள் இதைப்பற்றி மறந்து விடாமல் இருப்பதற்காக, ஞாபகப்படுத்தத் தான் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : I said I would consider his request. We should not violate the rules.

Now, I hold that there is no necessity for a half-hour discussion.

III.—ADJOURNMENT MOTIONS.

(1) BONUS DISPUTE IN TEXTILE MILLS IN COIMBATORE.

MR. SPEAKER : Sri K. A. Mathialagan has given notice of an adjournment motion.

SRI K. A. MATHIALAGAN : Sir, I have given notice of the following adjournment motion—

" This House do stand adjourned to discuss the following matter of urgent pubic importance, viz.,

The situation arising out of the non-settlement of bonus issue in Kaleswara, Kadiri, Kasturi, Somasundara, Pankaja, Radiga, Janardana and Cambodia Textile Mills and the Textool and Viscose Factories and the consequent industrial unrest in the Coimbatore Region owing to the failure of the Government to take steps for an amicable settlement of bonus issue between capital and labour."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவரவேண்டும் என்பதற்கான முக்கியமான காரணம், இந்த போனஸ் பிரச்னையிலே கோயம்புத்தூரில்

7th November 1966] [Sri K. A. Mathialagan]

இருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், பல மில்களிலே இருந்தாலும், குறிப்பிட்ட ஏழு மில்களில் சட்டப்படி கொடுக்க வேண்டிய 4 சதவீதம் போனஸ் கூட கொடுப்பதில் முதலாளிகள் உடன் பாட்டுக்கு வராமல் தொழிலாளிகள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள், கதவடைப்பு முதலியன அங்கு ஏற்பட்டிருக்கின்றன. சர்க்காருக்கு நிச்சயமாக இதிலே பொறுப்பு உண்டு. முதலாளிகளுடைய பிடிவாதத்தைத் தளர்த்தி சுமுகமான நிலைமையை ஏற்படுத்த சர்க்கார் தவறி இருக்கிறது என்ற காரணத்தினால், இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் இந்தத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு அமைதிக் குறைவு ஏற்பட்டு, அது தொழில் உற்பத்தியை பாதிக்கும் என்பதோடு இப்போது இருக்கும் சூழ்நிலையில் பேரபாயமான நிலைமை இருக்கிறது என்று முதலாளிகளுக்கு வற்புறுத்தவும் அவர்களும் இந்த காரணங்களுக்காக இணங்கி ஒத்துழைப்புக் கொடுக்கவும், இந்தத் தீர்மானத்தை ஏற்று, இந்த மிக முக்கியமான பிரச்னைமீது விவாதிப்பதற்கு சபை நேரத்தை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: Sri M. Karunanithi has given notice of an adjournment motion on the same subject.

திரு. மு. கருணாநிதி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்னை குறித்து நானும் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைத் தங்கள் மூலமாக அளித்திருக்கிறேன். ஏறத்தாழ 10,000 தொழிலாளர்கள், கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய சோமசுந்தரா, காளீஸ்வரா போன்ற ஒன்பது பஞ்சாலைகளில் போனஸ் பிரச்னையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அன்னியில், டெக்ஸ்டூல் கம்பெனியில் 6,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்குள்ள முதலாளிகளும் தொழிலாளர்கள் சங்கங்களும் கூடிப் பேசி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் கடந்த மாதம் 31-ம் தேதிக்குள் போனஸைத் தந்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தார்கள். அதன்படி அவர்கள் கொடுக்கவில்லை என்று பொறுப்பானவர்களுக்கு, அமைச்சர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மாத்திரமல்லாமல், கணக்கு முடிந்து எட்டு மாத காலத்திற்குள்ளாக போனஸ் கொடுக்கப்படவேண்டும் என்ற நியதி இருந்தும் அதுவும் இந்த விவகாரத்தில் மீறப்பட்டிருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, தீபாவளி போனஸைப் பெற முடியாத நிலையில் 16,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வேலை நிறுத்தம் போன்ற முடிவுகளுக்குத் தள்ளா வண்ணம் அரசாங்கம் தலையிட்டு வேண்டியதைச் செய்யத் தவறி இருக்கிறது என்று சுட்டிக்காட்ட இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும் என்ற என்னுடைய பிரேரணையை வலியுறுத்துகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போனஸ் பிரச்னையானது is a matter relating to routine administration. சாதாரணமாக, தொழிலாளர்கள்,

முதலாளிகள் அளவிலே ஆண்டு தோறும் பல இடங்களில் ஏற்படுகிற ஒரு விஷயம். அதற்கென சர்க்காரிலே வழிகள், விதிகள், அதற்கு வேண்டிய நிர்வாக அதிகாரிகள், இயந்திரங்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, எந்தவிதமான தொழில் தகராறு ஏற்பட்டாலும், தொழில் தகராறுச் சட்டத்தின் கீழ் அவர்கள் சென்று, கமிஷனர் மூலமாகவும், கன்ஸிலியேஷன் ஆஃபீஸர் மூலமாகவும் பரிகாரம் தேடிக்கொள்ள முடியும். அவ்வாறு இருக்கிற சட்டப்படி நடக்கவேண்டிய விஷயங்கள் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தாங்களே தீர்ப்பு வழங்கி இருக்கிறீர்கள். ஆகவே, இது ஒத்திவைப்பு பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: உடனடியாக சர்க்கார் அதில் தலையிட்டு ஆவன செய்யும் நிலையில் இருக்கிறதா? அதற்கான யோசனை ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-00 a.m. **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எனக்குத் தெரிந்தவரையில் கமிஷனர் ஆப் லேபர் தலையிட்டு அதைப்பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதம் நடந்துகொண்டிருக்கிறது, நேரடியாகவோ அல்லது அதிகாரிகள் மூலமாகவோ நடந்து கொண்டிருக்கிறது.

MR. SPEAKER : I do not think this is a matter for an adjournment motion. Hence, consent is withheld.

(2) HAVOC CAUSED BY CYCLONE IN TINDIVANAM.

MR. SPEAKER : The hon. Member, Sri Thangavelu, has also given notice of another adjournment motion.

திரு. ஆ. தங்கவேலு: வீடூர் டாம் உடைப்பு பற்றி அப்பொழுது கொடுத்தேன். இப்பொழுது திண்டிவனம் தாலுகா நகரம், பல கிராமங்கள் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகத் தான் நான் இந்த ஒத்திவைப்பு மோஷனைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைக் குறித்து நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நாளைக்கு ஒரு விரிவான அறிக்கையை சபை முன்பு வைப்பதாக இருக்கிறார்கள். எல்லா விவரங்களும் சேகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member can speak tomorrow on the subject. Now, consent is withheld.

IV.—ANNOUNCEMENTS.

(1) ADJOURNMENT MOTION.

MR. SPEAKER : I have to inform the hon. Member, Sri S. Madhavan, that I am not taking up his adjournment motion here, as I have already disallowed it in my chamber itself.